# செய்தி குறிப்பு dt: 8.3.2018

மத்திய அரசின் விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மற்றும் மீன்வளத்துறையின், 22.02.2018ம் தேதியிட்ட கடிதம் எண். K-12052-6/1/2017-LH-பகுதி(1)ன் தொடர்ச்சியாக இந்திய கால்நடை மருத்துவ பேரவை (Veterinary Council of India) வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு பின்வருமாறு.

---

இந்திய கால்நடை மருத்துவ பேரவையின் மூலம் வரும் 2018-19 கல்வி ஆண்டிற்கு இந்தியா முழுவதும் நிரப்பப்பட உள்ள (ஜம்மு & காஷ்மீர் நீங்கலாக), அங்கீகரிக்கப்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் உள்ள 15% (அகில இந்திய ஒதுக்கீட்டில்) உள்ள கால்நடை மருத்துவ இளங்கலை பட்டப்படிப்பிற்கான (B.V.Sc & A.H.) இடங்களுக்கு நீட் (NEET) (இளங்கலை)-2018 தேர்வின் மதிப்பெண் தரவரிசையினை பயன்படுத்தியே மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர் என தெரிவித்துள்ளது.

கால்நடை இளநிலை பட்டப்படிப்பில் (B.V.Sc & A.H.) சேர்வதற்கு / தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மாணவர்களை தேர்ந்தெடுக்க இதர தகுதிகள் அனைத்தும் இந்திய கால்நடை மருத்துவ பேரவையின் குறைந்தபட்ச கால்நடை மருத்துவக்கல்விக்கான 2016ம் ஆண்டு விதிகளை பின்பற்றியே இருக்கும்.

..2/-

எனவே இந்த ஆண்டு இந்தியா முழுவதும் உள்ள 15% கால்நடை மருத்துவ படிப்பிற்கான இடங்களுக்கு விண்ணப்பிக்க உள்ள மாணவர்கள் மத்திய அரசின் இடைநிலை கல்வி குழுமம் (CBSE) 06.05.2018 அன்று நடத்த உள்ள நீட் (இளநிலை)-2018 (NEET) தேர்வினை எழுதி எதிர் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என தேசிய கால்நடை மருத்துவ பேரவையின் செயலர் அனுப்பியுள்ள பொது அறிக்கை தெரிவிப்பதாக புதுச்சேரி கால்நடை மருத்துவ பேரவையின் பதிவாளர் தெரிவித்துக்கொள்கிறார்.

இந்த குறிப்பு பொதுமக்களின் நலன் கருதி வெளியிடப்படுகிறது.

8/3/18

COLLECTOR
KARAIKAL
8/3/18